DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Proceedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 79/2023
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | கண்ணதாசன் |
| Father/Husband Name | தனசேகர் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **18.04.2024**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1.) எதிரி காவல் நிலையத்தில் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்று சொல்லமுடியுமா என்றால் சி.எஸ்.ஆர்-ஐ பார்த்தால் சொல்லமுடியும். எதிரி மீது இதுவரை எத்தனை புகார் கொடுத்திருக்கிறேன் என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு அந்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்காததால் செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் 3 முறை புகார் கொடுத்தேன். எதிரிக்கு எந்த எந்த தேதியில் 3 முறை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொல்லமுடியுமா என்றால் தேதி தெரியாது. நீதிமன்றத்தில் 1 வழக்கறிஞர் அறிவிப்பை தாககல் செய்திருக்கிறேன் மற்ற 2 அறிவிப்பை நான் வைத்திருக்கிறேனா என்றால் என்னிடம் இல்லை.

2. நான் மூன்று அறிவிப்புகள் அனுப்பாததால் என்னிடம் அவை இல்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வருமான வரி கணக்கை பார்த்தால் எதிரிக்கு நான் கொடுத்த கடன் விவரம் தெரியவரும் என்றால் சரிதான். வருமான வரி கணக்கை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எதிரிக்கு கொடுத்த கடன் விவரம் குறித்து எனது வருமான வரி கணக்கில் குறிப்பிடவில்லை என்பதால் தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விற்பணை ஒப்பந்தம் எதிரியுடன் நான் செய்யவில்லை என்றாலும் அவ்வாறு செய்திருந்தால் அந்த ஒப்பந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

3. எதிரி மீது மதுராந்தகம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எதிரியின் நிலத்தை எனக்கு கிரையம் செய்துகொடுக்கும்படி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். சர்வே எண்.287/24 ல் 10.5 சென்ட்டும், 287/25 ல் 5 சென்ட்டும் மேற்படி உரிமையியல் வழக்கில் 2 மற்றும் 3 அயிட்ட சொத்தாக கூறி எதிரி கிரையம் செய்து கொடுக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

அதிகபடியாக 1 லட்சம் ரூபாய் எதிரிக்கு கொடுத்ததாக புகாரில் சொல்லியிருக்கிறேன். ஆனால் எந்த தேதியில் 1 லட்சம் ரூபாயை கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் மொத்தமாக கொடுத்த பணத்தை கணக்கு செய்தபோது அதிகமாக 1 லட்சம் கொடுத்தது தெரியவந்தது. 02.02.2023 ம் தேதி எனது வழக்கறிஞர் மூலம் ஒரு பதில் அறிவிப்பை அனுப்பியிருந்தேன் என்றால் சரிதான்.

4. அந்த பதில் அறிவிப்பில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பதில் அறிவிப்பு தான் எனது வழக்கறிஞர் மூலம் 02.02.2023 ல் அனுப்பியது என்றாலும் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது என்றாலும் சரிதான். (**அந்த 02.02.2023 தேதியிட்ட பதில் அறிவிப்பு எதசா ஆவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எதிரி தரப்பில் 30.01.2023 ல் அனுப்பபட்ட அறிவிப்புக்கு எனது தரப்பில் அனுப்பபட்ட பதில் அறிவிப்பு தான் எதசா ஆவணம் 1 என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் எதிரியின் முகவரி எண்.19/2, கம்பதம் தெரு, விளங்கனூர் கிராமம் மற்றும் அஞ்சல், மதுராந்தகம் வட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. எதிரி தரப்பில் அனுப்பிய 30.01.2023 தேதியிட்ட அறிவிப்பில் நான் எதிரிக்கு 10 லட்சம் ரூபாய் தரவேண்டும் என்று விவரம் சொல்லப்பட்டிருந்தது என்றாலும் அந்த அறிவிப்பிற்கு எனது தரப்பில் எதசா ஆவணம் 1 பதில் அறிவிப்பு அனுப்பபட்டது என்றால் சரிதான். எனது தரப்பில் அனுப்பபட்ட பதில் அறிவிப்பில் 4 வது பத்தியில் 18 லட்சம் ரூபாய் வங்கி மூலமும் 1 லட்சம் ரூபாயை ரொக்கமாகவும் கொடுத்ததாக விவரம் உள்ளது என்றால் சரிதான். அந்த 1 லட்ச ரூபாயை பதிவு நடந்த நாளில் கொடுத்தேன். பதிவு நாளில் 1 லட்சம் ரூபாயை கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பதில் அறிவிப்பில் இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக பத்திரத்தில் பிழை திருத்தம் செய்வதற்காக ரூபாயை 29,000- த்தை நான் எதிரிக்கு கொடுத்ததாக விவரம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

6. கூடுதலாக 1 லட்சம் ரூபாய் எதிரிக்கு நான் கொடுத்திருந்தால் அந்த விவரம் குறித்து எனது பதில் அறிவிப்பில் சொல்லியிருப்பேன் என்றால் எதிரி தரப்பில் கொடுத்த 30.01.2023 ம் தேதிக்கு மறுநாள் 31.01.2023 ல் எதிரி காசோலையை வழங்கி சமாதானம் பேசியதால் விவரம் கூறவில்லை. நான் சொல்வதுபோல் சமாதானம் பேசியிருந்தால் நான் பதில் அறிவிப்பு அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எனது பதில் அறிவிப்பில் சமரசம் பேசப்பட்ட விவரம் கூறப்படவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் உண்மையில் பணம் வாங்கவில்லை என்றாலும் பொய்யான வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் 01.02.2023 ல் எதிரி மீது நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

7. எதிரி என்னுடன் சமாதானமாக பேசி காசோலையை கொடுத்திருந்தால் நான் புகார் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் காசோலையை அவர் விற்ற வீட்டில் இருந்து எடுத்து எதிரிக்கு தெரியாமல் நானே காசோலையை பூர்த்தி செய்து தவறான வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் தொகை குறிப்பிட்டிருந்தால் தான் அது காசோலையாக கருதப்படும் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு பணமே கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது வருமான வரி கணக்கு அறிக்கை மற்றும் கிரைய ஒப்பந்த ஆவணங்கள் எனது தரப்பில் அனுப்பிய மற்ற 2 அறிவிப்புகளையும் மற்றும் சிஎஸ்ஆர் ஆகியவற்றை தாக்கல்

செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்யமுடியும்.

8. எதிரிக்கு நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் எதிரி எனக்கு காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் எதிரிக்கு நான் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கு நான் 10 லட்ச ரூபாய் கொடுப்பதை தவிர்க்க வேண்டி பொய்யான வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை சட்டப்படி செல்லாத காசோலை என்றாலும் தவறான முகவரிக்கு அறிவிப்பை அனுப்பியிருக்கிறேன் என்றாலும்எதிரிக்கு பதில் கூற முடியாத அளவிற்கு தவறான முகவரிக்கு அறிவிப்பை அனுப்பியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல.